முருகப்பெருமான் துணை

**மகான் நகுலர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**04.12.2023**, திங்கட்கிழமை

1. ஞானபண்டிதன் அவதாரமாக வந்த
ஞானியே ஆறுமுக அரங்கனே
தானதரும பலம் தனை கூட்டி
தரணியில் அற்புதம் நடத்தும் தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
ஆசிதனை சோபகிருது தேள்திங்கள்
அச்சமற மூவாறுதிகதி சோமவாரம்
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 18 ம் நாள், 04.12.2023, திங்கட்கிழமை)
3. வாரமதில் நகுலன் யானும்
வையகம் நலம்பெற உரைப்பேன்
சோரமின்றி ஞானவாழ்வு காண
சுருதிபடி உலகமெங்கும் சுத்தநெறி
4. சுத்தநெறி காட்டும் அரங்கன்
சூட்சும வழிகளை ஏற்றுமே
இத்தரையில் உலகோர் பின்பற்றி
ஏழாம்படை வீடு நோக்கி வர
5. வருகவே உலகம் எங்கிலும்
வள்ளல்தன்மை பெருகி வர
தருமவான்களாக உலக மக்கள் எல்லாம்
தரணிக்கு நல்வழிகாட்டும் ஞானப்படைகளாக
6. ஆகவே ஆக்கம் கண்டு
அரங்கமகான் சக்தியாக
வகைபட உலக மாற்றமாக
வருங்காலமதில் ஞான யுகம்

7. ஞானயுகம் படைத்து அருள்வர்
ஞானிகளாக மக்களெல்லாம்
ஞானபலம் கூடி சிறந்து
ஞானஆட்சிதனை படைப்பர்
8. படைக்கவே கலியினில் அற்புதம்
பரோபகாரம் வளர்க்கும்படி
தடையற அரங்கன் அன்னதான
தரும சேவையை விதைத்துவர
9. வருகவே விதைகள் அனைத்தும்
வளர்ந்து ஞான விருட்சமாக
தரும மகா சக்தியாக மாறி
தரணி காப்பது உறுதி என்பேன்
10. என்கவே கலி இன்னலான
எல்லா சிக்கலும் விலகி
நன்மை தரும் வண்ணம்
ஞானதேசிகனார் தொண்டர்கள்
11. தொண்டர்கள் ஞானப்படைகளாக
தேசமெங்கும் பரவி நின்று
உண்டாக்குவர் ஞான ஆட்சி
உரைத்திட்ட அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—